விலை ரூபா 1-00 ★

வீடியோ ரசிகர்களே!
இன்றைய வெளியீடுகள்!
போக்கிரி ராஜா
பயணங்கள் முடிவதில்லை
கலியுக கர்ணன்
குணம் வீடியோ
சென்ரர்
21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். போன்: 24238
(4612)

ஈழநாடு
THE EELANADU

யாழ். நகரில்!
இப் பொழுது கிடைக்கின்றது.
★ குளியலறை உபகரணங்கள்.
★ சமையலறை பொருட்கள்.
★ கதவுப் பூட்டுக்கள்.
★ வீட்டு உபகரணங்கள்.
★ அல்பா கம்பனி தயாரிப்புகள்.
செந்தூரன்
ரேடிங் கம்பனி
313, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். போன்: 24139
(4611)

மலர் 24 புரட்டாதி 7 ஜுல்கஜ் 5 இதழ் 222
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 23—9—82

# கொழும்பு-யாழ். ரயில் கொள்ளை ஜனாதிபதி அறிக்கை கோரியுள்ளார்!

## உறங்கலிருக்கைப் பெட்டிப் பொறுப்பாளர்; ரயில் சாரதி மீதும் விசாரணை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு-யாழ். மெயில் ரயிலில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை நிகழ்ந்த பயங்கரக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. டபிள்யு. பி. ராஜகுருவிடம் பூர்வாங்க விசாரணை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார்.

ஜனாதிபதியின் இப்பணிப் புரையைத் தொடர்ந்து மேற்படி அறிக்கையை விரைவாக அனுப்பிவைக்க வடபிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் ஜனப எம். எஸ். நிஸாம் தலைமையில், யாழ். பொலிஸ் நிலைய தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரி திரு. சிவசப்பு தவலிங்கமும், வவுனியா பொலிஸ்நிலைய குற்றத் தடுப்புபிரிவு பொறுப்பதிகாரி திரு. வி. ரி. கிருஷ்ணராசாவும் பூர்வாங்க விசாரணைகளைக் கொண்ட அறிக்கையைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் ஜனப் நிஸாம், புகையிரத திணைக்களப் பொதுமுகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்—

★ "மெயில் ரயிலில் கொள்ளைச்சம்பவம் நடைபெற்ற நேரத்தில் அபாயச் சங்கிலி இழுக்கப்பட்டும் ரயில் நிறுத்தப்படாததன் காரணம் என்ன?

★ "உறங்கலிருக்கைப் பெட்டியின் கதவு பூட்டப்பட்டிருக்காததன் காரணம் என்ன?

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, உத்தியோகபூர்வமான வைபவங்கள் எதிலும் கலந்துகொள்ளமாட்டார் எனத்தெரியவருகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் என்ற கோதாவில் பிரசார வேலைகளில் ஈடுபடும்பொருட்டே யாழ். மாவட்டத்துக்கு அவர் விஜயம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அக்டோபர் 2ம் திகதி மாலை யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி உரைநிகழ்த்துவார்.

[8ம் பக்கம் பார்க்க]

## பாலஸ்தீன அகதிகள் படுகொலை: இலங்கை அரசு கண்டனம்

(கொழும்பு)

மேற்கு பெய்ரூட்டில் பாலஸ்தீனஅகதிகள் முகாமில் நூற்றுக்கணக்கில் பாலஸ்தீன சிறுவர், பெண்கள் உட்படமில் அகதிகள் கண்மூடித்தமாகப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, இலங்கை அரசாங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன கையெழுத்திட்டு, வெளிநாட்டு அமைச்சு மூலம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், இப்படுகொலையில் இருந்து இஸ்ரேல் தப்பித்துக் கொள்ளமுடியாது. இதுவோர் கண்மூடித்தனமான படுகொலை சம்பவமாகும். இது

[8ம் பக்கம் பார்க்க]

## 'அமிர்' தந்தி

[கொழும்பு]

ரயில் பிரயாணிகளின் உயிருக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்புஅளிக்க, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எதிர்க்கட்சி முதல்வரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் போக்குவரத்து அமைச்சர் ஜனப் முகமட்டை தந்தி மூலம் கேட்டுள்ளார்.

கொழும்பு-காங்கேசன்துறை ரயிலில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை நிகழ்ந்த கொள்ளைச் சம்பவம், மிகவும் கொடூரமான செயல் என்றும், பிரயாணிகளை பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையென்றும் உடனடி பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்குமாறும் திரு. அமிர்தலிங்கம் தமது அவசரத் தந்தியில் கேட்டுள்ளார்.

## யாழ். ஆஸ்பத்திரியில் கடத்தப்பட்ட சிறுமி புல்லுக்குளத்தருகில் மீட்பு!

### காதணிகள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியஆஸ்பத்திரிசிறுவர் வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சைபெற்றுவந்த 6வயதுச் சிறுமி கடத்திச் செல்லப்பட்டு, சிறுமியின் காதணி கொள்ளையடிக்கப்பட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சத்தியவதி என்ற இச்சிறுமியுடன் வார்ட்டில் அவரது பேத்தியார் உதவிக்கு தங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட சிறுமி யாழ். புல்லுக் குளத்திற்கு அருகில் கொண்டு செல்லப்பட்டு, காதணி அபகரிக்கப்பட்டபின்னர் அநாதரவாக அங்கு விடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சிறுமியை ஆஸ்பத்திரி வார்ட்டில் காணததைத் தொடர்ந்து அந்த வார்ட்டில் பரபரப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அநாதரவாக அழுது கொண்டு நின்ற சிறுமியை, அவ்வழியால் சென்றவர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததைத் தொடர்ந்து இச் சம்பவம்பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பேத்தியாரிடம் சிறுமி ஒப்படைக்கப்பட்டார்.

சில மாதங்களுக்கு முன்னர் இதே ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டில், குழந்தை ஒன்று கடத்திச் செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. [மா]

## முதியான்சே மனு நிராகரிப்பு

[கொழும்பு]

முன்னாள் நிக்கவரட்டிய எம். பி. திரு. முதியான்சே தென்னக்கோனின் ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான ஆட்சேபனை மனு, உயர்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

## "பாதுகாப்புக்கு உறுதி அளிக்கவும்"

### ஜனாதிபதிக்கு குமார் தந்தி

(யாழ்ப்பாணம்)

ரயில்கொள்ளை சம்பவத்தை தொடர்ந்து வடபகுதியில் மீண்டும் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கியுள்ளதாக மக்கள் அஞ்சுகின்றனர். இச்சம்பவங்கள் மேலும் நீடிக்காத விதத்தில் பாதுகாப்பு வழங்குவதாக உறுதியளிக்கவும். இவ்வாறு பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கமுடியாதபட்சத்தில் ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக வாபஸ் பெறவும்.

இவ்வாறு கோரும் அவசரத் தந்தியை தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான திரு குமார் பொன்னம்பலம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இத்தந்தியில்: இத்தகைய வன்முறைகள் தலைதூக்கியுள்ள இத்தருணம் ஒரு தேர்தல் காலமென்பதையும் ஆகையினால் நிலைமை மோசமடைவதைத் தவிர்க்கும்படியும் திரு. பொன்னம்பலம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார். (கி)

யாழ். நகரில் நவீனவசதிகள் கூடியது
ஹோட்டல் றெலெக்ஸ்
தேன்சிந்தும் ஐஸ்கிறீம், பொம்பே சுவீற்ஸ் வகைகளுக்கும் சுவைமிக்க கோழிப்புரியாணி வகைகளுக்கும் யாழ். நகரில் சிறந்து விளங்கும் ஸ்தாபனம்
HOTEL ROLEX
340, ஆஸ்பத்திரி வீதி – யாழ்ப்பாணம்
4559

# வரி விளம்பரம்

## தேவை

கரவெட்டி சயன்ஸ் சென்ரர் ஸ்தாபனத்தாரால் ரூபவாகினிக்காகத் தயாரிக்கப்படவிருக்கும் வீடியோ நகைச்சுவைத் திரைப்படத்தில் நடிப்பதற்கு நடிக, நடிகையர் தேவை. ஆர்வமுள்ள இளைஞர்க்கு முன்னுரிமை உண்டு. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: ந. இ. இளங்கோ, 'குறளகம்', கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. (4628)

எமது ஸ்தாபனத்திற்கு 5 வருட பிடவை அனுபவமுள்ள விற்பனையாளரும் களஞ்சியப் பொறுப்பாளரும் தேவை. சம்பளம் 500 ரூபா முதல் 1000 ரூபா வரையும் வழங்கப்படும். மீன்பிடி உபகரணங்கள் விற்பனை செய்வதிலும் அனுபவம் உள்ளவர்களும் தேவை. நேரடியாக தொடர்பு கொள்ளவும். மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், 16, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 4622

எமது அச்சகத்துக்கு அனுபவம், ஆர்வம் உள்ள பங்காளராக விருப்பம் உள்ளோர் உடன் வரவும். தங்கராஜா அச்சகம், 39/3, மானிப்பாய் வீதி-யாழ். நகர். 4615

8 ஸ்ரீ–10 ஸ்ரீ வரையிலுள்ள நல்ல பாவனையிலுள்ள Scooter (VESPA) விலைக்கு தேவை. முகவரி: செ. சந்திரசேகரம், 63, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. 4618

## விற்பனைக்கு

1150 கிலோ மீட்டர் பாவிக்கப்பட்டதும் 86 ஸ்ரீ 5532 இலக்கமுடையதும் 2 பேருடன் முழுக்காப்புறுதி செய்யப்பட்டதுமான RX 115 மொடல் 'யமகா' மோட்டோர் சயிக்கிள் விலைக்கு உள்ளது 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ''சிலோன் மேர்சன்ற்'' ஸ்தாபனத்தில் நேரில் பார்வையிடலாம். விலை ரூபா 21,500/- வி. ரங்கட்கு கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம். 35/8 சிவகுருநாதர்வீதி, யாழ்ப்பாணம். 4623

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆட்டருக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4563

## வாடகைக்கு

இரண்டுஅறை வீடு இல 64, நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் சகல வசதிகளோடும் வாடகைக்குஉண்டு; வேலாயுதபிள்ளை, செம்பியன் லேன், கொக்குவில். 4609

## சோதிடம்

வெளிநாடு செல்லுதல், தொழில், கல்வி, திருமணம் முதலியன குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக. K. L. M. Krishnapillaiy, 83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (4603)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

தெகிவளை, 29ஏ, முகாந்திரம் ஒழுங்கையைச் சேர்ந்த காலம் சென்ற சின்னத்தம்பி சொலமன் சாமுவேல் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

றீனி காருண்யச்செல்வி யோகநாதன், 28, வேம்படி ரோட், யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3639

மேலேயுள்ள இலக்கங்கொண்ட தத்துவகாரருக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாத சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1982–ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24–ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

1982–ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9–ந் திகதியாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்.

வை.ச. செந்தில்நாதன்,
மனுதாரின் சட்டத்தரணி. (4606)

வல்வெட்டி

## பாதுகாப்புச் சங்க தலைவர்

(கரவெட்டி)

வல்வெட்டி பாவனையாளர் பாதுகாப்புச்சங்கத் தலைவராக திரு. செல்லக்குட்டி இராமசாமி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஆயுள்வேத வைத்தியரான இவர் வல்வெட்டித்துறை கிராமோதய சபை உறுப்பினராகவும் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், கந்தர்மடம், குமாரசாமி றோட், 93/4ம் இலக்கத்தைச் சேர்ந்த கார்த்திகேசு சின்னத்தம்பி செல்லத்துரை பெண் பரமேஸ்வரி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம்) இல. ரி/3680

கார்த்திகேசு சின்னத்தம்பி செல்லத்துரை. 93/4, குமாரசாமி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்

எதிராக

1. வேலுப்பிள்ளை தம்பி ஐயாவும்
2. பெண் நாகரத்தினமும். இருவரும் 93/4, குமாரசாமி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2'ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்

1982ம் ஆண்டு 6 மாதம் 30ந் திகதியாகிய இன்று திகதியிடப்பட்டது.

வரைவு
இராமலிங்கம்
பாலசுப்பிரமணியம்,
சட்டத்தரணி

4

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன்

## கேள்வி விண்ணப்பம்- வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்தில் உள்ள வெற்றுச்சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு, விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா 110/- (ரூபா100/-திருப்பி வழங்கப்படும்) செலுத்தி, விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்திபதிவுத் தபால் மூலம், ''பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம், பரந்தன்'' என்ற முகவரிக்கு 11-10-82க்குப் பிந்தாமல் (கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்ப விபரத்தினைஎழுதி) அனுப்புதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

620

## கத்தியால் வெட்டுஞராம்

### சந்தேகநபர் கைது

(பண்டத்தரிப்பு)

தமது மைத்துனரை கத்தியால் வெட்டிய நபர் ஒருவரை பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர் பண்டத்தரிப்பைச் சேர்ந்த சண்முகம் இரத்தினம் என்பவரை அவரது மைத்துனரான தங்கராசா என்பவர் குடும்பச் சண்டையை அடுத்து கத்தியால் வெட்டியதாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பச்சண்டையே இந்த கத்திவெட்டுக்குக் காரணம் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. தலையில் பலத்த வெட்டுக் காயங்களுடன் சண்முகம் இரத்தினம் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதுபற்றி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபரான தங்கராசாவை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இளங்கதிர் கையெழுத்துச் சஞ்சிகை

இச்சஞ்சிகையை யாழ் மாவட்ட அபிவிருத்திசபையின் உப அலுவலகமாகிய சங்கானை நூலகத்தில் பார்வையிடலாம்.

ஆசிரியர்: நாகமணி மகேந்திரலிங்கம். (4613)

## நன்றி நவிலல்

3-9-82 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அருமைப் புதல்வி செல்வி சுதாகினி (ராஜி) அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பி வைத்தவர்களுக்கும், 22-9-82 புதன்கிழமை பெரியவிளான் வடசேரி விக்னேஸ்வரப்பெருமான் தேவஸ்தானத்தில் நடைபெற்ற ஆன்மசாந்திப் பிரார்த்தனையில் பங்கு கொண்டவர்களுக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

பிரம்மஸ்ரீ க. சுந்தரேஸ்வரசர்மா தம்பதிகள்,
வடசேரி விக்னேஸ்வரப்பெருமான்
தேவஸ்தானம்,
பெரியவிளான், இளவாலை.

46 6)

## பொதுமக்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்

திருநெல்வேலி கோணாவளை வீதி சட்டத்தரணி பொ. காங்கேயன் அவர்களுடைய வீட்டின் கிழக்கெல்லையில் ஆரம்பிக்கும் பதின்மூன்று பரப்புக் காணித்துண்டும் [கரம்பன்ஓடை] திருநெல்வேலிச் சந்தியின் தெற்கெல்லையில் இருக்கும் இரண்டு பரப்புக் காணித்துண்டும் [வட்டுவாவத்தை] சம்பந்தமாக, வழக்கு ஒன்று பதியப்பட உள்ளது என்பதை இக்காணிகளின் உரிமையாளராகிய நான் பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

முகவரி:
சி. ஜெயலட்சுமி,
மே/பா சண்முகம் முத்துலிங்கம்,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(4617)

# விக்ரர் அன் சன்ஸ்

100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## எங்கள் புதிய தொலைபேசி இலக்கம்: 23346

புதிய வீடியோ படங்களை வாடகைக்கு பெறுவதற்கு எம்மை நாடுங்கள்
மற்றும் பாடல்களை பதிவு செய்வதற்கும் மின்சார வேலைகளுக்கும் எம்மை நாடுங்கள்.

(4599)

# மிகப் பெரிய அணு ஆலை: இந்தியாவுக்கு ரஷ்யா உதவும்!

## இந்திராவின் சோவியத் விஜயத்தின் எதிரொலி!

புதுடில்லி, செப் 22

'தாராபூரில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் அணுசக்திநிலையத்தைவிட இரு மடங்கு பெரிதான அணுசக்தி நிலையத்தை நிறுவ சோவியத் யூனியன் இந்தியாவுக்கு ஒத்துழைப்பு வழங்க உறுதியளித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சோவியத் யூனியனுக்கு மேற்கொண்டுள்ள விஜயத்தை அடுத்தே இந்த உதவி இந்தியாவுக்குக் கிடைக்கவிருக்கின்றது.

இந்தியா சோவியத்யூனியனின் இந்த உதவியை தனது நாட்டின் பாதுகாப்பு நிலையுடன் ஒப்பிட்டு ஆராய்ந்த பின்னரே முழு அளவில் நாடுமென்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அமெரிக்காவுக்குச் சென்றிருந்தபோது அமெரிக்க அரசு தாராபூர் அணுநிலையத்துக்கு உதவி வழங்குவதில் சில நிபந்தனைகளை விதித்திருந்தது. பின்னர் இந்தியா வந்த பிரெஞ்சு அமைச்சரொருவரும் அமெரிக்கா விதித்த நிபந்தனையின் அடிப்படையிலேயே பிரான்சும் தாராபூர் நிலையத்துக்கு உதவிவழங்குமென்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கி)

## குட்டிமணி-ஜெகன்: மரண தண்டனையை ரத்துச் செய்யக்கோரிக்கை

சென்னை, செப். 22

''இலங்கை இளைஞர்களான குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை ரத்துச்செய்யவும்.''

இவ்வாறு கோரி சர்வதேச மன்னிப்புச்சபையின் மதுரைக் கிளை, கடிதமொன்றை ஜனாதிபதி திரு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

இம் மரண தண்டனையை தமது கிளை வன்மையாகக் கண்டிக்கிறதென்றும் அதன் செயலாளர் திரு டி. ஜெயபாலன் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பிவைத்துள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். [வெ

பெய்ருட்டில்

## இன்னும் ஓரிரு தினங்களில் ஐ. நா. சமாதானப்படைகள்

லண்டன், செப் 22

மேற்கு பெய்ரூட்டில் நடைபெற்ற படுகொலைச்சம்பவங்களையடுத்து இத்தாலி, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் தமது படைகளை மீண்டும் லெபனுனுக்கு அனுப்பிவைக்கவுள்ளன. இந் நாடுகளின் படைகள் இன்னும் ஓரிருதினங்களில் பெய்ரூட் செல்லும் என அறிவிக்கப்பட்டது

பிரான்ஸ் தனது இராணுவத்தின் பாரசூட்படையினரை அனுப்பிவைக்கின்றது. அமெரிக்கா இம்முறை அனுப்பவுள்ள வீரர்களின் எண்ணிக்கை இறுதியாக பெய்ரூட்டிலிருந்தும் ஐ. நா. பாதுகாப்புப்படையில் அங்கம் வகித்து வெளியேறிய அமெரிக்க துருப்புக்களின் எண்ணிக்கையிலும் சில மடங்கு அதிகமாக இருக்குமென்று தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க மேற்கு ஐரோப்பிய நகரங்கள் பலவற்றில் மேற்கு பெய்ரூட் படுகொலைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து கண்டன ஊர்வலங்களும், கூட்டங்களும் நடத்தப்பட்டன.

லெபனுனின்புதிய ஜனுதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும், கொலைசெய்யப்பட்ட திரு. பஷீர் கமாயலின் சகோதரரான, திரு. அமின் கமாயல் மே. பெய்ரூட் கொலைகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில் லெபனுனின் ஒருநாள் பூரண துக்க தினத்தை நேற்று பிரகடனப்படுத்தினுர். [கி]

## லெபனுன் புதிய ஜனுதிபதி அமின் கமாயல்

பெய்ரூட், செப். 22

லெபனுனின் புதிய ஜனுதிபதியாக அமின் கமாயல் தெரிவு செய்யப்பட்டுள்ளார் அண்மையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவமொன்றின் போது பலியான லெபனுன் ஜனுதிபதி பஷீர் கமாயலின் இடத்திற்கே அவரின் சகோதரரான அமின் கமாயல் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இன்னும் இரண்டு தினங்களில் இவர் லெபனுனின் ஜனுதிபதியாகப் பதவியேற்க உள்ளார்

இவரின் பதவிக்காலம் ஆறு வருடமாகும். [வெ]

அமெரிக்க வங்கிகளிலுள்ள

## அரபுநிதிகளை மீளப் பெறவேண்டும்

### - பாலஸ்த்தீன பிரமுகர்

டுனீஸ், செப். 22

மேற்கு பெய்ரூட் படுகொலைகளுக்கு இஸ்ரேல் பொறுப்பு என்றும் இதற்கு அமெரிக்கா ஆதரவு வழங்கியுள்ளதென்றும், தற்போது டுனீசியாவிலிருக்கும் பாலஸ்தீனப் பிரமுகர் ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று டுனீசியாவில் பாலஸ்தீன இயக்கத்தவர், அரபு நாடுகளின் உச்சி மகாநாடொன்றை அவசரமாக நடத்தினர். அப்போதே மேற்கண்ட குற்றச்சாட்டும் தெரிவிக்கப்பட்டது.

அப்பிரமுகர் மேலும் அங்கு பேசுகையில் அரபு நாடுகள் பெற்ரோலிய உற்பத்தியை குறைவடையச் செய்து அமெரிக்காவுக்கு எண்ணெய் வழங்குவதில் கட்டுப்பாடுகளைக் கொண்டுவரவேண்டுமென்றும் அமெரிக்க வங்கிகளில் அரபு நாடுகள் வைப்பில் வைத்துள்ள பணத்தை மீளப்பெறவேண்டுமென்றும் கூறினுர். அவர் மேலும் பண்டல சார்பற்ற நாடுகளுடனும், சோவியத்யூனியனுடனும் அரபுநாடுகள் சேர்ந்து மேற்காசியாவில் அமைதியை ஏற்படுத்தவும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்க்கவும் திட்டங்களை வகுக்க வேண்டுமென்ருர். [கி]

## வட்டார கல்வி அதிகாரிகளுக்கு நிரந்தர நியமனம்!

[யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக வட்டாரக கல்வி அதிகாரிகளாக கடமையாற்றுபவர்களை அப்பதவிகளில் நிரந்தர வட்டாரக் கல்வி அதிகாரிகளாக நியமிக்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு எம், பீ, சி. சில்வாவை அமைச்சிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து இவ் விஷயம் தொடர்பாக பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் மகஜர் சமர்ப்பித்துக் கலந்துரையாடினுர்.

கோரிக்கை மிகவும் நியாயமானது என்று ஏற்றுக் கொண்ட அமைச்சின் மேலதிகச் செயளாளர் திரு எம். பீ. சி. சில்வா இவ்விஷயத்தை கல்வி அமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்காவினதும் அமைச்சின் செயளாளர் திரு. இ. எல். விஜெயமானே கவனத்திற்கும் கொண்டு வந்து அவர்களின் அங்கீகாரத்துடன் சகல தற்காலிக வட்டாரக் கல்வி அதிகாரிகளையும் அப்பதவிகளில் உறுதிப்படுத்தி நிரந்தரமாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தம்மிடம் தெரிவித்ததாக இ, த. ஆ. சங்கம் பொதுச் செயளாளர் தெரிவித்தார்.

## கிராமோதய சமாதான சபை அமைக்கப்படும்

(புலோலி]

புலோலி கிழக்குப்பகுதி கிராமிய மக்களுக்கிடையே தலைதூக்கும் சிறுசச்சரவுகள் பிரச்னைகளைத் தீர்த்து கிராமத்தில் ஒற்றுமையை நிலவச்செய்வதற்காக கிராமோதயசமாதன சபையொன்றை அமைப்பதென புலோலி கிழக்கு கிராமோதய சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது,

இக்கிராமோதய சபைக்கூட்டம் பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய மண்டபத்தில் கிராமோதய சபைத் தலைவர் திரு. கே. குமாரவேலு தலைமையில் நடைபெற்றது நிறைவேற்றப்பட்ட ஏனைய பிரேரணைகளாவன.

''புலோலி கிழக்கில் உபதபால் அலுவலகமொன்று அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

''பனைமரம் தேவையற்ற முறையில் தறிக்கப்படுவதைத் தடைசெய்ய கடும் நடவடிக்கை எடுக்குமாறு கோரவேண்டும்.

''கிராமிய மக்களின் ஒற்றுமை கருதியும் கிராமிய அபிவிருத்தி கருதியும் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்,

''நிலநீர் இயற்கை வளங்களைப்பாது காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

''மரம் நாட்டும் இயக்கத்தை எமது கிராமப்பகுதிகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்''

## 'நவம்' அகில இலங்கை சமாதான நீதவான்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் அகில இலங்கைக்கான சமாதான நீதவாஞக நீதி அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் திரு நவரத்தினம், நாடு திரும்பியதும் சமாதான நீதவாஞகச் சத்தியப்பிரமாணம் எடுப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## "பாரபட்சமற்ற சேவையாற்றும் சங்கம்"

[நெடுந்தீவு]

''கூட்டுறவுச் சங்கம் தனது எல்லைப்பரப்பில் பொருளாதார விருத்திக்கும் வேலைவாய்ப்புக்களை வழங்கவும் கூடிய நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதாகவே அதன் விதிகள் அமைந்துள்ளன. ஒரு சனசமூக நிலையத்தை கட்டித்தரவோ அல்லது அதற்கு பத்திரிகைகள் விநியோகிக்கவோ, உபவிதிசள் இல்லை எனினும் இப்பகுதி மக்களின் அறிவுப்பசியைத் தணிக்க நெடுந்தீவு முன்னேற்றக் கழகத்துடன் தொடர்பு கொண்டு அதன் உதவியைப் பெற்றுத்தர முயல்வேன்.

இவ்வாறு நெடுந்தீவு மேற்கில் பல. நோ. கூ. சங்கத்தின் மகளிர்குழுவினுல் ஆரம்பித்து வைக்கப்பட்ட பனம்பொருள் கொள்வனவு நிலையத்தில் பேசிய ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் கூறினுர்''

மகளிர் குழுத்தலைவி திருமதி கதிரேசு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ''வேலைவாய்ப்புக்களிலும் சரி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளிலும்சரி ப. நோ. கூ. சங்கம் இனமத வேறுபாடின்றி அனைவருக்கும் சம சந்தர்ப்பம் அளித்து வருகிறது இதையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிருேம்'' என மகளிர்குழுச் செயலாளர் திருமதி த. முத்துப்பிள்ளை பேசுகையில் கூறினுர். [உ]

லண்டனில்

## சுகாதார சேவையினர் வேலைநிறுத்தம்!

லண்டன், செப். 22

இங்கிலாந்தில் சுகாதாரப் பகுதியினர் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். இவர்களுக்கு ஆதரவாக ஏனைய தொழிற் சங்கங்களும் இன்னும் 24மணி நேரத்தில வேலைநிறுத்தத்தில் இறங்கவுள்ளன.

நேற்றைய தினம், இங்கிலாந்தின் பிரபல பத்திரிகைகள் சிலவற்றின் அச்சகப் பகுதியினரும் வேலைக்குச்செல்லாது சுகாதாரப் பகுதியினருக்கு தமது ஆதரவைத் தெரிவித்தனர். [கி]

## மணிவாக்கு

தங்கள் கருத்துக்களை ஒருநாளும் மாற்றிக் கொள்ளாதவர் இருவர். அதில் ஒருவர் மூடர், அடுத்தவர் இறந்தவர்.

—லவல்

# மலேஷிய தமிழ் மகனுக்கு யாழ். பல்கலைக்கழகப் பட்டம்

மலேசியத் தமிழன் துரைராசசிங்கம் அவர்களுக்கு மதிப்புக்குரிய கலாநிதிப் பட்டம் கிடைத்துள்ளது. எங்கள் ஈழவள நாட்டின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி என்னும் ''டிலிற்'' பட்டத்தை வழங்க முன்வந்துள்ளமை பாராட்டற்பால வைபவமாகும்.

45 ஆண்டு ஆசிரியர்பணி மேற்கொண்டு நகர்ப்புறப்பகுதிகளையும், அபிவிருத்தியடைந்து வந்த காட்டுப் பிரதேசங்களையும் நன்கறிந்தவர் எளிமை, இனிமை, படிப்பார்வம் விடாமுயற்சி, குருவிசுவாசம், தமிழ் மொழியபிமானம், சைவாபிமான முதலிய உத்தம குணங்களின் குணியாக வாழும் சிங்



### க. சி. குலரத்தினம்

திரு. எஸ். துரைராசசிங்கம் அவர்கள் 78 ஆண்டுகள் நிரம்பிய இளைஞன். அவர் 45 ஆண்டுகள் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றியதோடு, 36 நூல்கள் எழுதியமை போதாதென்று நூற்றுக்கணக்கான கட்டுரைகளும் எழுதியுள்ளார். இன்றும் படித்துக் கொண்டே இருக்கிறார் படிப்பதும் எழுதுவதும் அவரின் தொழில்.

''மலேசியாவில் இந்தியாவின் செல்வாக்கு'' என்றால் இந்து நாகரிகத்தில் ஒருபெரிய அத்தியாயம். அதைப்பற்றி எழுதவும் பேசவும் மலேசியாவில் ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் கலாநிதி துரைராசசிங்கம் அவர்களேதான்.

#### ஊரும் பேரும்

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளின் ஊர்கள் சம்பந்தமாக அவர் இளமைக்காலத்தில் எழுதி வெளியிட்டுப் புகழீட்டக் காரணமாயிருந்தவர் அவரின் தந்தையாராவர் தந்தையார் மலேயாவில் புகையிரதப்பகுதியில், 1892 முதல் 1918 வரையும் வேலைபார்த்தவர். நாட்டின் பல பாகங்களுக்கும் வேலைமாறிச் சென்றுறைந்தமை காரணமாகத் துரைராசசிங்கம் அவர்களின் அநுபவமும் வளர்ந்தது.

துரைராசசிங்கம் அவர்கள், கம் அவர்களுக்கு எல்லாம் தெரியும்.

#### குடும்பம்

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டை வாசிகளுள் பண்டிதர், புலவர் எனப் பெயர் பெற்ற கே. சி. நாதன் என்னும் சிதம்பரநாதன் சட்டத்தரணியாயும் இருந்தவர். அவரின் குடும்பத்தைச் சேர்ந்த துரைராசசிங்கம் அவர்களுக்குச் சைவத்தமிழபிமானம் இயல்பாகவே உண்டானது. அதை முதிரவைத்த பெருமை ஆசிரியர் மூவர்க்குரியது என்பர்.

#### முப்பெருங்குரவர்

துரைராசசிங்கம் அவர்களின் தந்தையார் மலேசியாவில் உத்தியோகப் பார்த்த காலத்தில், 19்8ம் ஆண்டில் நீண்டகால விடுமுறை பெற்று வட்டுச்கோட்டைக்கு மீண்டிருந்த காலத்தில் நோயுற்று மறைந்தார்.

வட்டுக்கோட்டையில் ஆரம்பக் கல்வி கற்ற துரைராசசிங்கம், சைவப்பெரியார் புலோலி சிவபாதசுந்தரம் அவர்களின் அரவணைப்பில் விக்ரோறியாக் கல்லூரியில் ஆங்கிலம் கற்றார். சைவப்பெரியார் மாணிப்பாய் இந்துக்கல்லூரிக்குச் சென்றதும், அவரைப் பிரிய மனமில்லாமல், தாமும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்குச் சென்றார். பீ. ஏ. மாஸ்ரர் என்று அன்பு ஒழுகச் செல்லமாக அழைத்து வந்த சிவபாதசுந்தரனார் பரமேஸ்வராக் கல்லூரிக்குச் சென்ற காலத்தில், தாமும் அவரைத் தொடர்ந்து அங்கே சென்றார் இதனால் சிங்கம் அவர்கள் தம்மை பேரியின் ஆட்டுக்குட்டி எனக் கூறிக் கொள்வது வழக்கம்.

மானிப்பாயில் பயின்ற காலத்தில் சுவாமி விபுலானந்தர் தமிழபிமானம் ஊட்டிய வகையையும், பரமேஸ்வராக் கல்லூரியில், ரி. முத்துக்குமாருலத்தீன், ஆங்கிலம், வரலாறு கற்பித்த வண்ணத்தையும் சிங்கம் அவர்கள் அடிக்கடி நினைவு கொண்டு எழுதுவது வழக்கம் அவரின் குருபக்தி பெரிது அவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் மேல்வகுப்புப் படித்தவரலாறு சுவையுள்ளதாகும்.

#### வாலிபர் மாநாடு

மாணுக்கர் மாநாடு என்றும் வாலிபர் மாநாடு என்றும் புகழ்பூத்த கூட்டம், ஹண்டி பேரின்பநாயகம் சபாபதி குலேந்திரன் ஒறேற்றர் சுப்பிரமணியம், புறாடி, மதியாபரணம், கனகதுங்கம் எஸ். ஆர். கனகநாயகம் முதலானோர் கூட்டியதாகும். அக்கூட்டத்தில் கூடியிருந்த பெருமையும் துரைராசசிங்கம் அவர்களுக்கு உண்டு முன்னர் தமது தமிழநாட்டு யாத்திரையின் போது மகாத்மா காந்தியடிகள், இராஜாஜி, சி எவ். அண்றூ முதலானோரின் தரிசனம் பெற்றுப் பழகிய இவர் அவர்கள் 1927 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு வருகை புரிந்தமையைப் பெருவாய்ப்பாகக் கொண்டு பழகினர்.

பெரும் விவேகி எனப்புகழீட்டிய மு. பாலசுந்தரம் அவர்களும், துரைராசசிங்கம் அவர்களும் இணைக்காரியதரிசிகளாக மாணுக்கர் மாநாட்டில் தெரியப்பெற்றனர். பரமேஸ்வராக்கல்லூரி அதிபர்கோடன் பியஸ் என்பாரைப் பின் தொடர்ந்து சிங்கள மாணுக்கர்களும் இக்கூட்டத்தில் கலந்திருந்தனர். துரைராசசிங்கம்

[5-ம் பக்கம்பார்க்க]

## நமது நோக்கு

### மீண்டும் யாழ் மெயில்!

''ஆருடன் சொல்லி அழுவது?,' என்ற அவலக் குரலே, திங்கள்இரவு யாழ். மெயிலில் நடைபெற்ற பயங்கரக் கொள்ளைக்கு இலக்கான பயணிகள் எழுப்பியிருப்பார்கள்.

கோர நாடகத்தில் அதிக மாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை; ஆயுதந்தாங்கிய கொள்ளையர், கெடிக் கலக்கமுற்ற பிரயாணிகள்; தாலிகள் நகைகள் தாமாகவே கொள்ளையரின் கைக்கு இடமாற்றம்; இரண்டொரு எதிர்ப்பு; காதில் கையில் வாள் வெட்டு; சுமார் 50 பேரைக் கலக்கிய 15 கொள்ளையர் வழக்கம் போல்!

நாடகத்தில் நாம் கேள்விப்பட்ட சில மாற்றங்கள்; கொள்ளைக் கூட்டத்தில் கடலை குளிர்பானம் விற்பவர்கள் கலந்து கொண்டது; அபாயச் சங்கிலியின் வேலை நிறுத்தம். உறங்கலிருக்கைப் பெட்டி பூட்டப்படாத நிலை; பாதுகாவலரின் பொறுப்பிழந்த 'வேடிக்கைபார்க்கும்' நிலை; 'மெயிலே' கானமயில் போல் மெதுவாகப் புளியங்குளம் வந்தடைந்த மர்மம்; சதாநாயகர்கள் தருணம் பார்த்து சாரதிக்குப்பிரியாவிடை' கூறிஓடித் தப்பியது.

பயணிகள் கொடுத்த இத் தகவல்கள் வழக்கமான கொள்ளையில் நாயகர்கள்விப்படாதவை. சீ. ஜீ. ஆர். தனது அவப்பெயரை மாற்ற முயற்சிக்காத போதும், வவுனியா பொலிஸார் இந்த நாடகத்தைத் தொடர்ந்து, மீட்சி வேலையில தீவிரமாக ஈடுபட்டிருப்பது தேற்றமளிக்கும் தகவல். சந்தேகத்தின் பேரில் கல்கமுவையைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் ஒருந்தைக் காட்டில கைது செய்யப்பட்டதோடு கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டதாகச் செய்தி கூறுகின்றது,

இவ்வித யாழ். மெயில் கொள்ளை பலமுறை அடுத்தடுத்து நடந்ததால், புகையிரத சேவையில் நம்பிக்கை இழந்த மக்கள் பலர் பஸ் மூலம் நெடும் பிரயாணம் செய்து வருவது இன்றும் தொடர்கின்றது.

தனியார் பஸ்சேவை அபாயமற்ற பயணத்தை உறுதிப்படுத்தி வரும் போது, அரசின் றெயில்வே ஒரு பாதுகாப்பான சேவையை நிரந்தரமாக உறுதிப்படுத்த முடியாமற் போய் விட்டது, அதுவும் யாழ்ப்பாண—தமிழ் — மக்களைப் பாதிக்கும்செயலென்பதால் இந்த நிலைமை நீடிக்கிறதா? நியாயமான கேள்வி.

பொலிஸாராலும் ராணுவத்தினராலும் 'காவல்' புரியப்படும் வடபகுதியிலேயே இவ்வித பயங்கரக் கொள்ளை நடைபெறுகின்றது— கொட்டும் மழை போலல்ல; விட்டுவிட்டுப் பெய்யும் மழைபோல! வீட்டிலும் றோட்டிலும் அல்ல ஓடும் ரயிலில்.

இந்தக் கொள்ளை, ஜனாதிபதி தேர்தல் காலத்தில். நாடு அமைதியாக இருக்க வேண்டிய கட்டத்தில்நடைபெற முடியுமானால், அரசாங்கம் தனது போக்குவரத்து சேவையில், ஒரு பகுதி மக்களுக்கு பாதுகாப்பளிப்பதில்லையென்ற நோக்கமா? கொள்ளையர் வடபகுதி வரைக்கும் பொறுத்திருந்தனரே!

நடந்து முடிந்த கொள்ளைகளைத் தொடர்ந்து பொலிஸார் நடத்தும் தீரச் செயல்கள் பொருளைப் பறிகொடுத்தவருக்கு நன்மை அளிக்கலாம்.

உயிர்ச்சேதம் ஏற்படாத கையில் பெண்கள் தம் தாலிக்கொடிகளை கேட்க முன்னரே கழற்றிக் கொடுக்குமளவில் மிருகத்தனம்கட்டுக்கடங்காது மீறி வருகின்றது. சட்டமும் ஒழுங்கும் பத்திரிகைகளிலும், வானொலியிலுமே!

யாழ்ப்பாண மெயில் வரலாற்றில்உலகப்புகழ்பெற்ற பல தமிழ்ப் பெருமக்கள், மற்றும் பெரியவர்கள் பிரயாணஞ் செய்த வாகனம்! சுமார் 52 வருடங்களுக்கு முன் சேர் பொன்னம்பலம் இராமநாதனின் பூதவுடம்பைக் கொழும்பிலிருந்து கொண்டுவந்த அந்த அழகிய வாகனத்தில் பிரயாணஞ் செய்த பல சிங்களத் தலைவர்கள் அவர் புகழுடம்பைப் பேணிக் கொண்டு வந்த காட்சி மறக்க முடியாத காட்சி.

அரை நூற்றாண்டில், 35 வருட சுதந்திர இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி கண்ட ஜனநாயக சோஷலிச குடியரசில் இந்த விபரீத நிலைக்கு பரிகாரம் காண முடியாதா?

## கமக்காரர் கருத்துகள்

ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவர் தாம் 'விவசாயி' என்று தன் தொழிலைக் குறிப்பிட்டிருந்தார். துரதிர்ஷ்டவசமாக அவர் ஓடாத மூன்று குதிரைகளில் ஒருவரானார்.

இந்நாட்டின் ஜனாதிபதி ஒரு விவசாயியாக வருங்காலத்தில் நாட்டின் தன்னிறைவு பற்றி நாம் அஞ்சத்தேவையில்லை.

நகரின் பிரபல கல்லூரிகளில் படித்து, அந்தத் துரைத்தனமான ஞாபகங்களை இன்றும் மீட்பதில் இனங்காணும் தலைவர்கள் விவசாயிகளுக்கு விமோசனமளிப்பது எங்ஙனம்?

கடந்த ஆட்சியில் விவசாயிகளுக்கு வேண்டிய உற்சாகம் அளிக்கப்பட்டதை சீமாட்டி வர்க்கத்தைச் சேர்ந்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அடிக்கடி நினைவூட்டியபோதும், அவருக்கு பக்கபலமாக இருந்த அமைச்சர்கள் சிலர் நாடு என்ன கஷ்டப்பட்டபோதும் வெளிநாட்டின் கடனுதவியில் தங்கியிருக்கப்படாதென உறுதிகொண்டமையால் உள்ளூர் உற்பத்திக்கு உறுதியளித்தனர்.

மரக்கறி, மீன்,முட்டை, இறைச்சி போன்ற உணவுப்பொருட்களின் விலை இன்று சாதாரண மக்கள் மட்டுமல்ல, ஆயிரக்கணக்கில் வருமானம் பெறும் நடுமட்ட உத்தியோகத்தர்களுக்கும் எட்டாதநிலை.

கடனுதவியாலும் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தும் பொருளாதாரக் கொள்கையாலும் கிராமவாசிகளின் நிலையை நன்றாக உயர்த்த இடமுண்டு.

வங்கி உதவ்கநு இநதுய அரசவங்கியின் அற்புத சாதனைகளை எங்கள் வங்கிகள் அறிய வேண்டும். இந்தியாவின் மிகப்பெரிய அந்த வங்கி மிகச்சிறிய தொழிலாளிக்கு விவசாயிக்கு உதவுகிறது.

எங்கள் வங்கிகளின் சிவப்புநாடா கமக்காரனை அணுகுமா? வயலுக்கு அல்லது தோட்டத்துக்குப் போகுமா? கமக்காரனின் குறை அறிந்து கடன் கொடுத்து உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய உதவி, அக் கடனை மீட்கும்பணியில் ஈடுபடுமா?

இப் பிரச்னை இன்று பேசப்படவேண்டும்.

### வவனியாவிலும் பலத்தமழை

[வவனியா]

நீண்ட நாள் வரட்சிக்குப் பின்னர் கடந்த இரண்டு நாட்களாக கடும் மழை வவனியாவில் பெய்தது.

விதைநெல்லு, விதைஉழுந்து போன்ற தானியங்களின விலைகள் அதிகரித்துள்ள அதே நேரத்தில் வெங்காயத்தின் விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

வெளியூர் வியாபாரிகள் பெருமளவு இங்கு வந்தபோதும் தரகர்களின் கெடுபிடியே விலை வீழ்ச்சிக்கு காரணமாம் என்று தெரிவிக்கப்பட்டது.

## மக்கள் கருத்து

### இது ஒருகடைசிச் சந்தர்ப்பம்

இலங்கை வாழ்தமிழ் பேசும் இனம் காலகாலமாக மாறி மாறி வரும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ்பட்ட கஷ்டங்களும், துன்பங்களும பொருள் சேதங்களும் உயிர்பலிகளும் எவ்வளவு என்று கணிக்கப்பட முடியாத நிலையில் வாழ்கிறார்கள்,

தமிழ் இனத்துக்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் கிடைத்தும் துர்அதிஷ்டவசமாக கடைசி நேரங்களில் எல்லாவற்றையும் தவறவிட்டார்கள் இனிமேலாவது புத்திசாலித்தனமாக நடந்தால் ஒரு நல்ல காலம் வர இடமுண்டு.

அதாவது 20 – 10 – 82 இல் வரும் ஜனாதிபதி தேர்தல் இது ஒரு கடைசி சந்தர்ப்பம் இதை நழுவவிட்டால் தமிழ் இனத்துக்கு விமோசனம் இல்லை என்று சொல்ல வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழ் ஈழம் என்று சொல்லி இதுவரை மக்களை ஏமாற்றி விட்டார்கள் இனிமேல் அவர்களில் நம்பிக்கை வைக்கிறது எங்களை நாங்கள் ஏமாற்றுவது போலாகும். கூட்டணியினர் தற்போதைய ஜனாதிபதியோடு ஒரு இணக்கம் கண்டுகொண்டார்கள் போல் தோன்றுகிறது.

தமிழ் பேசும் மக்களே நிதானமாக உங்கள் வாக்குகளை திரு. குமார் பொன்னம்பலத்துக்கு அளிக்க வேண்டும் அவர் ஜனாதிபதியாக வந்தால் அவருக்கும இருக்கும் சகல அதிகாரங்களையும் ஊகித்து தமிழ் இனத்துக்கு நல்வாழ்கையை கொடுக்கக் கூடிய சந்தர்ப்பத்தை அவருக்குக் கொடுங்கள் உன்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் இந்தச்சந்தர்ப்பத்தில் எங்கள் சின்னக் குணங்களை மறந்து பெருநோக்கோடு பெருந்தன்மையாக திரு. குமார் பொன்னம்பலத்தை வெற்றி பெற செய்ய வேண்டும்.

இந்தத் தேர்தலில் திரு. குமார் பொன்னம்பலம் துணிந்து ஐந்து அபேட்சகருக்கெதிராக போட்டியிடுவது ஒவ்வொரு தமிழ் மகனும் பெருமைபட வேண்டிய விஷயமாகும்.

ப. இராசரத்தினம்
சட்டத்தரணி
யாழ்ப்பாணம்.

## ★ ஜனுதிபதி தேர்தல்களம்

### "சார் பி. இராமநாதன் காலத்தில்

# தமிழ்மட்டும் சட்டம் இல்லை; அதனுல் சிங்கள இனம் அவரை ஆதரித்தது"

### கல்வியங்காடு கூட்டத்தில் குமார்

[யாழ்ப்பாணம்]

அன்று சேர் பொன். இராமநாதனை சிங்கள இனம் ஆதரித்து வெற்றிபெறச் செய்தது போல் இன்று ஜனுதிபதிதேர்தலில் தமிழினம் தன்னை ஆதரித்து வெற்றிபெறச் செய்ய வேண்டுமென ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு அறுகின்ருர். அன்று சேர் பொன் இராமநாதன் காலத்தில் தமிழ்மட்டும் சட்டம் இருக்கவில்லை. அன்று பயங்கர வாதச்சட்டத்தின் கீழ் சிங் ள இளை ஞர் வேட்டையாடப்பட வில் லை. அதனுல் சிங்கள இனம் அன்று சேர் பி. இராமநாதனை ஆதரித்தது ஆனுல் இன்று நிலைமை வேறு.

கள்ளியங்காடு சனசமூசநிலையத்தில் நடந்த ஜனுதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. பி. கதிர்காமநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

அன்று சர். பி. இராமநாதன் போட்டியிட்டபோது, தமது உறவினர்கள் அவரை ஆதரித்ததாகவும் அதேபோல் இன்று ஜனுதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் தன்னை ஆதரிக்கவேண்டும் என ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு கேட்கிருர். அன்றிருந்தநிலையும் இன்றுள்ள நிலையும் வேறுவேறு தன்மையன அன்று சேர் பி. இராமநாதன் சகல இனமக்களையும் பாகுபாடின்றிநடத்திவந்தார்.

அதனுல் சிங்கள மக்களும் அவரை ஆதரித்து வெற்றி பெறச்செய்தனர்.

இந்த ஜனுதிபதி தேர்தலில் எனக்குக் கிடைக்கும் வாக்குகள் திரு. குமார் பொன்னம்பலத்திற்ோ, அல்லது தமிழ்க் காங்கிரசிற்கோ கிடைத்த வாக்குகள் என்று நான் கூறமாட்டேன். இது தமிழீழ இலட்சியத்திற்கு மட்டும் கிடைத்த வாக்குகள் என்பதைக் கூறுகின்றேன்.

இந்த தேர்தல் இன உணர்ச்சியை வளர்ப்பதற்கும் நிலைநாட்டுவதற்கும் பேட்டியிடுகின்றேன் இனத்திற்காக, தமிழ்மக்களுடைய அபிலாசையை முன் வைத்து போட்டியிடுகிறேன்.

ஜனுதிபதி தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரித்தால் அது தமிழ்ஈழலட்சியத்தை பகிஷ்கரிப்பதாகும்.

சட்டத்தரணி மோதிலால் நேரு, திரு. எம். தனஞ்சய மூர்த்தி, திரு. முத்துராகவன் ஆகியோரும் பேசினுர்கள். [க]

## சிறிமா, அநுரா கூட்டாக

# இயங்கினுலும் கொப்பேகடுவ வெல்லமாட்டார்!

### ஜே. ஆர்.

(கொழும்ப)

''திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா திரு. அநுரா பண்டாரநாயக்கா ஆகியோர் ஒன்ருக இணைந்து செயற்பட்டாலும் அவர்களது வேட்பாளரான திரு. கொப்பேகடுவவிற்கு வேண்டிய வாக்குகளை பெற்றுக்கொடுத்து விடமுடியாது.''

இவ்வாறு ஜனுதிபதி ஜே. ஆர். காலி மாநகரசபை மைதானத்தில் தமக்கு ஆதரவாக நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றினுர். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: திரு. கொப்பேகடுவ தான் பதவிக்கு வரும் பட்சத்தில் தற்போதைய அரசியலமைப்பைக் கிழித்தெறிந்து விடப்போவதாகக் கூறிவருகின்ருர். முடியுமானுல் அவர் அதைச் செய்து பார்க்கட்டும் என்று நான் சவால் விடுகிறேன்.

தற்போதைய அரசியல் அமைப்புத்திட்டத்தை சதித்திட்டங்களாலும் வன்முறைகளாலுமே திரு. கொப்பேகடுவ கூறியதுபோல கிழித்தெறியலாம். ஏனையவர்கள் இதனை அசைக்கமுடியாது. ஏனெனில் அது மிகவும் சிறந்தது.

திருமதி பண்டாரநாயக்கா பதவியிலிருந்தபோது அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி பொதுமக்களை சிறையிலிட்டும், துன்புறுத்தியும்வந்தார் ஆனுல் நான் இவ்வாறு செய்தது கிடையாது. நாட்டில் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட வேளைகளில் மட்டும் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தினேன்'', என்ருர். [கி]

## "ஜே. ஆர்., கொப்பேகடுவ, கொல்வின்போன்ற

# 50 வயதுக்கு மேற்பட்ட அரசியல்வாதிகள் ஒதுக்கப்படுவர்"

### -- ரேகண

[கொழும்பு]

''மக்கள் விடுதலை முன்னணி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் ஜே. ஆர்., கொல்வின், கொப்பேகடுவ உட்பட 50 வயதுக்கு மேற்பட்ட அரசியல்வாதிகள் அனைவரும் அரசியலிலிருந்து ஒதுக்கப்படுவார்கள். இவர்களுக்குப் பதிலாக இளம்அரசியல்வாதிகளே நாட்டின் நிர்வாகத்தைக் கவனிக்க அனுமதிக்கப்படுவார்கள்.''

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணித் தலைவரும் இக்கட்சியின் ஜனுதிபதித் தேர்தல் வேட்பாளருமான திரு. ரோகண விஜேவீர கண்டியில் நடைபெற்ற தமது பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''நான் ஜனுதிபதியாக தெரிவானதும் 24 மணித்தியாலங்களில் சகல தனியார் நிலங்களையும், ஆலைகளையும், வர்த்தகநிலையங்களையும் அரச உடமையாக்கும் விதத்தில் சட்டங்களைக் கொண்டு வருவேன்.

கடந்த அரை நூற்ருண்டு காலமாக ஐ. தே. க. வும், ஸ்ரீ. ல. சு. கட்சியும் மாறி மாறி ஆட்சிக்கு வந்து நாட்டைப் பாளாக்கியுள்ளன. இவ்வாறு இவ்விரு கட்சிகளுமே மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றும் நிலைமாறவேண்டும்.

ஜே. ஆர். ஜயவர்த்தனு போலி வாக்குறுதிக்கொடுத்து பதவிக்கு வந்தார். வந்தவுடனேயே அரிசிப் பங்கீட்டு புத்தகங்களை மக்களிடமிருந்து பறித்ததுடன் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளையும் உயர்த்தி உள்ளார்.

தற்போது ஸ்ரீ. ல. சு. கட்சியினர் பிரசார வேலைகளில் இறங்கியுள்ளனர். இவர்களது நடவடிக்கைகள் கொதிக்கும் எண்ணெயிலிருந்து நெருப்பினுள் வீழ்ந்த நிலைக்கே மக்களை இட்டுச்செல்கின்றது! என்ருர். (கி)

## ஜனுதிபதிதேர்தல்: வாகனஅனுமதி விண்ணப்பம்

[கொழும்பு]

ஜனுதிபதி தேர்தலில் வாக்களிக்கச் செல்ல அங்கவீனர்கள் விசேட வாகனங்களைப் பயன்படுத்த விரும்பினுல் அதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 12ம் திகதிவரை அனுப்பிவைக்கலாம்.


இவ்விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் வைத்தியச்சான்றிதழையும் சேர்த்து அனுப்பினுல் தேர்தல் அதிகாரிகள் முடிவு எடுப்பதற்கு இலகுவாகவிருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது. (வெ]

### கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

காவலூர் ஜெகநாதன் எழுதிய ''நாளை'' என்ற நூல்பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்றுமாலை யாழ். ஆஸ்பத்திரிவீதியிலுள்ளபெண்கள்கல்வி நிலையத்தில் 'மேகம்' இலக்கிய குழுவினரால் நடாத்தப் படுகின்றது.



யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச கராட்டிச் சங்கத்தின் இலங்கைக் கிளையால் நடாத்தப்பட்ட கராட்டிப் போட்டிகளில் நான்காம் தரத்தில் அறுபது கிலோ கிராம் போட்டியில், 'பிரவுண் பெல்ட்' சாம்பியனுகவும், சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்ட திரு ஐ. மணிவாசகம் படத்தில் (நடுவில்) காணப்படுகிருர். இலங்கைக் கிளை கராட்டிச் சங்க மத்தியஸ்தரும், சிரேஷ்ட போதனுசிரியரும், இலங்கை கராட்டி சாம்பியனுமான திரு. ஜோன்தான் ஏ. நதானியல், யாழ். கிளையின் செயலாளரும் அவருடன் இருக்கிருர்கள்.

## மலேஷியா தமிழ்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் முயற்சியால் 300 பட்டதாரி மாணுக்கர்கள் கூடியிருந்தனர்.

### மலாயாவுக்கு மீளல்

துரைராசாசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து லண்டன் மெற்றிகுலேசன் பரீட்சையில் சித்திபெற்று மதிப்புக்குரிய புத்தகப்பரிசாக பைபிள் நூலும் பெற்றுக் கொண்டு மலாயாவுக்கு 1925 ஆம் ஆண்டில் மீண்டார்.

சென்ற வழியில் இவர் சிங்கப்பூரில் 'பண்பாட்டு அடிமைத்தனம்'' என்னும் பொருள் பற்றிப் பேசிய போது காந்தித்தொப்பியும் அணிந்திருந்தார். இதனுல் CID திணைக்களத்தோடு சிக்கல்உண்டாக்கித் தப்பிமலாயாவுக்குள் புகுந்தார்.

### ஆசிரியர் வேலையிற் புகழ்

மலாயாவுக்கு மீண்ட துரைராச சிங்கம் அவர்கள் பஹாங் பிரதேசத்தில் பல்வேறிடங்களில் ஆசிரியராயிருந்து பல்லாயிரம் மாணுக்கர்களை உருவாக்கினுர் அவரின் பழைய மாணுக்கர்கள் வரிசையில் மந்திரிமார் பொறுப்பதிகாரிகள் பலர்இருக்கிருர்கள்.

ரான் ஸ்ரீ கசால்பி என்பாரி புகழ்பூத்த உள்நாட்டமைச்சராயிருந்தவர் இவரே துரைராசசிங்கம் அவர்களின் ஊரும் பேரும் என்ற நூலுக்கே உருவும் முகவுரையும் அமைத்தவராவர் அந் நூல் 1927ஆம் ஆண்டில்போட் வெல்ட் முதல் குவான்ரன்வரை'' என வெளிவந்ததாகும்.

ஆசிரியர் துரைராசசிங்கம் ஆங்கிலத்தை அணுகிய முறை ஒரு புதிய முறை. அவர் சுற்றுடற்கல்வி சமூகக்கல்வி வரலாறு சமயம் நாட்டுப்பாடல் முதலியவற்றினூடாக ஆங்கில மொழியைத் திறமையுடன் கற்பித்தார் என்று ஸ்ரார் பத்திரிகையில் ஹெங், சு. சென் அருமையாக எழுதிப் புகழ்மாலை சூட்டியுள்ளார்,

### கல்விப்பணிப்பாளர் செய்த கௌரவம்

மலாயாவில் கல்விப்பணிப்பாளராயிருந்த ஜெருல்ட் ஹோகின்ஸ் என்பார் துரைராசசிங்கம் அவர்களின் எழுத்தோவியங்களைக்கருத்தூன்றிப் படித்தபின், இவரை இராசாங்க ஆசிய சங்கத்தில் அங்கத்துவராக்கிக் கௌரவித்தார் அச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற பின் இவரின் படிப்பார்வம் அதிகரித்தது. மலாயாவின் மூலைமுடுக்கு காடுகரம்பை எங்கும் சுற்றிப்பார்த்துக் குறிப்பெடுத்துவந்தார். அவர் எழுதிய நூல்களுக்கு கல்வியதிகாரிகள் முன்னுரை கொடுத்துக் கௌரவித்துவந்தனர். ''நான் பிறந்த நாட்டில்'' என்னும் நயமான நூலை இவர் எழுதி வெளியிட்டார்.

துரைராசசிங்கம் அவர்களுக்கு அவர் எழுதிய நூல்கள் யாவும் நல்லபுகழைக்கொடுத்தன. இலகுவான எளிய ஆங்கில நடையில் அவர் எழுதியவற்றை எல்லா இனத்தவரும் விரும்பிப்படித்தனர். வெள்ளைக்காரர் பலர் அவரின் நூல்களை வெகுவாக மெச்சினர். பாரதப்பிரதமர் பண்டித நேரு அவர்களும் இலங்கையில் முன்னுள் ஆங்கிலப் பேராசிரியராயிருந்த கலாநிதி EFC லுடைவைக் அவர்களும் பாரதமணி இராஜகோபாலாசாரியார் முதலானேரும் துரைராசசிங்கத்தை பாராட்டியுள்ளார்கள் எல்லாவற்றிற்கும் மேலாக அவரின் கலைத் தொண்டு பெரிது என்று நேரு அவர்கள் புகழ்ந்திருக்கிருர்கள்.

ஒருமுறை யப்பானிய தளபதி ஒருவர் மலேசியாவில் மின்சாரத் தொடர் வண்டியில் பிரயாணம் செய்தபோது, கூடப் பிரயாணஞ் செய்த துரைராசசிங்கம், தளபதி யப்பானிய மொழில் எழுதப்பெற்ற 'சிவநோஓதோறி' என்னும் நூலைக் கருத்துடன் படிப்பதைக் கண்டார். சில நிமிடங்களில் தளபதியுடன் ஓரளவுக்குப் பேசக்கூடிய சூழ்நிலையில், அந்நூல் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி எழுதிய சிவநடனம் எனக் கண்டு வியந்து, வெட்கிப் பிறநாட்டினர் எங்கள் ஆனந்தக் குமாரசுவாமியை அறிந்த அளவுக்கு நான் அறியவில்லையே என வருந்தினுர். அன்று தொடக்கம் ஆனந்த குமாரசுவாமி அவர்களின் நூல்களைத் தேடித் தேடி வாங்கிப் படிக்கத்தலைப்பட்டார்.

(மிகுதி நாளை வரும்)

## சேவைநலம் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி பிரதான நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. பி. கந்தசாமியும், யாழ்ப்பாண நீர்ப்பாசன காரியாலயத்திலிருந்து விபுலானந்த வல்லாளரும் இடமாற்றலாகிச் செல்வதையொட்டி யாழ்ப்பாண நீர்ப்பாசன இலாகா உத்தியோகத்தர்களால் மதிய விருந்துபசாரமளித்து பிரிவுபசாரம் வழங்கப்பட்டது.

திரு. கந்தசாமி கேக்கராவைக்கும், விபுலானந்த மட்டக்களப்புக்கும் இடமாற்றலாகிச் செல்கின்றனர்.

திரு. வி. என். கமலகாந்தன், திரு எஸ். நடேஸ்வரன், திரு ஜே. சொக்கலிங்கம் ஆகியோர் இவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினுர்கள்.

# "அரச ஒப்பந்தங்களைப் பொறுப்பேற்க கிராமோதயசபைகளுக்கு அங்கீகாரம்!'

(பண்டத்தரிப்பு)

''கிராமோதய சபைகளுக்கு தமது பகுதியிலுள்ள வீதிகள் திருத்தம், கட்டிட வேலைகள் ஆகிய அரசாங்க ஒப்பந்தங்களை பொறுப்பேற்றுச்செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது இதன்மூலம் இச்சபைகள் தமக்கு தேவையான நிதிவசதிகளை பெறக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும்''

இவ்வாறு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமோதய சபைகளின் உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்ட கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. எல். பற்றிக் குறிப்பிட்டார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவி திருமதி பேர்ளி அத்தனுசியார் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கு சண்டிலிப்பாய் இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. மகாதேவா ஆரம்ப உரை நிகழ்த்தினர். திரு பற்றிக் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சகலவிடயங்களையும் கவனித்துசெய்வது சிரமம் என்ற காரணத்தால் கிராமோதயசபைகள் நிறுவப்பட்டன. கிராமீயரீதியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு கிராமோதயசபைகள் சிறந்ததொரு சாதனமாகும். தமது பகுதியில் மூலவளங்களை பயன்படுத்தி கைத்தொழில்களை நிறுவி அதன்மூலம் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கவும் பொருளாதாரத்தை அதிகரிக்கவும் கிராமோதய சபைகள் முன்னின்று உழைக்கலாம். அத்துடன் கொள்ளைகள், திருட்டுகள் போன்றவற்றை தடுக்குமுகமாக பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தத்தமது பகுதிகளில் கிராமோதயசபைகள்மேற்கொள்ளலாம். வெறும் தீர்மானங்களை நிறைவேற்றும் சபைகளாக கிராமோதயசபைகள் இயங்காது. தமது பகுதி பொது மக்களுக்கு மிகவும் பயன்படக் கூடியமுறையில் சேவையாற்ற வேண்டும்''.

கிராமோதயசபைகள் பற்றி கருத்தரங்கில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விளக்கமான பதில்கள் கொடுக்கப்பட்டன.

## 'தமிழே பேசுவேன்; தமிழே எழுதுவேன்'

# பாரதியார் நினைவாக தபால் உறை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

''பாரதியார் ஒரு தேசியக் கவிஞராகவும் உணர்ச்சிக்கவிஞராகவும் விடுதலைக்கு வித்திட்ட வீரனகவும் திகழ்ந்ததுடன், எப்பொழுதும் அஞ்சா நெஞ்சம் கொண்டவராக வாழ்ந்ததன் காரணமாகத்தான் இன்றுஅன்னருக்கு நூற்றுண்டுவிழாக்கள் நாடெங்கிலும் எடுக்கப்படுகின்றன.''

இவ்வாறு மயிலணி நலன்புரி கண்காணிப்புச்சபையினர்பாரதியார் நூற்றுண்டு விழாவையொட்டி ஒழுங்கு செய்திருந்த கலந்துரையாடலின் போது திரு. கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை தெரிவித்தார். கண்காணிப்புச் சபைத் தலைவர் திரு. க. சின்னராசா தலைமை வகித்தார்.

தொடர்ந்து திரு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை பேசுகையில் தெரிவித்ததாவது, ''மற்றைய கவிஞர் போலல்லாது, பாரதியார் உண்மையாகதமது எண்ணத்தை செயற்பாட்டிலே காட்டியிருந்தார். அத்துடன் அவர் இந்தியாவின் விடுதலைக்கு வித்திட்ட அரசியல் தலைவர்களின் உள்ளக்கிடக்கையை அறிந்து அதற்கு ஏற்றவாறுகவிதைகளைஇயற்றி மக்களை ஒன்றுபடுத்தினர்.

பாரதியாரின் நூற்றுண்டு விழாவையொட்டி தபால் உறை ஒன்றினை வெளியிட்டு. தலைவர் பேசுகையில்: தபால் உறையில் பொறிக்கப்பட்ட ''இயன்றவரை தமிழே பேசுவேன். தமிழே எழுதுவேன், சிந்தனைசெய்வது தமிழிலே செய்வேன்'' என்ற பாரதியாரின் முதுமொழி தான் இன்றைய கட்டத்தில் தமிழ் பேசும் ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானதும், தவிர்க்கமுடியாததும் ஆகும். இக் கருத்தை செயல்பாட்டில் காண்பிப்பதே நாம் பாரதிக்கு செய்யும் கைமாறுஆகும்'' என்றுர்.

பண்டிதர் திரு. கா. நமசிவாயப, திரு. த. சிறீகுகன், திரு. சோமாஸ்கந்த குருக்கள் ஆகியோரும் பேசினர்.

இறுதியாக சபையின்பொருளாளர் இ. சிறீஸ்கந்தராசா நன்றிதெரிவித்துப் பேசினர்.

## தென்னிந்திய நடிகை ஜெயமாலா நடத்தும்

# கவர்ச்சி நடனங்களின் நோக்கம் என்ன?

## அவரே விளக்குகிருர்

''பரத நாட்டியக்கலை மிகவும் ஆழமானது; நுட்பங்கள் நிறைந்தது; விதிமுறைகளுக்குட்பட்டது. இத்தகைய நடனத்தை, இதனைப்பற்றி சற்று தெரிந்தோராலும் கர் நாடக சங்கீதத்தில் ஈடுபாடு கொண்டோராலும் மட்டுமே நன்கு புரிந்து இரசிக்கமுடியும். இன்று இக்கலை இந்தியாவில் மிக ஆழ வேரூன்றியுள்ளது. ஆயினும் கிராம வாசிகளதும், அன்ருடம் கடும் உழைப்புக்குள்ளாகுபவர்களதும் அபிமானத்தை இது அதிகளவு பெற்றுவிடவில்லை. காரணம் அவர்களுக்கு இதன் அம்சங்களைப் புரிந்து கொள்ளும் திறன் இல்லாமையே! ஆகையினுலேயே இத்தகைய மக்களின் இரசனைக்கேற்ற விதத்தில் நாட்டியமொன்றின் மூலம் கிடைக்கக்கூடிய இன்பத்தை இவர்களுக்கும் வழங்கவதே எனது இந்த கவர்ச்சி நடனங்களின் முக்கியநோக்கமாகும்.''

இவ்வாறு தற்போது இலங்கை வந்து குறத்தி நடனம், பாம்பு நடனம், அராபிய நடனம்,போன்றகவர்ச்சிநடன நிகழ்ச்சிகளை நடத்திவரும் பிரபல தென்னிந்திய கவர்ச்சி நடன நர்த்தகியான செல்வி ஜெயமாலா எனக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இவரது நிகழ்ச்சிகள் இப்போது யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

### தமிழிலும் சரளமாகப் பேசுகிருர்

இந்த நடனக்கலையினுள் தாம் பிரவேசித்தது பற்றி ஜெயமாலா தெரிவிக்கையில், மூன்று வருடங்களுக்கு முன்னரே நான் இந்தத் துறையினுள் பிரவேசித்தேன். எனது தாயார் திரைப்படத்துறையில் ஆர்வம் மிக்கவர். பல திரைப்படங்களில் முக்கியமான நடிகர்களுடன் நடிக்கும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்திருந்தது. இவ்வாறு அவர்



நடிப்புக்கலையில் கொண்டிருந்த ஆர்வமே என்னையும் இக்கலையுடன் நெருங்கிய தொடர்புகளைக்கொண்டிருக்குப் இந்தநடனக்கலையினுள்பிரவேசிக்கத்தூண்டியது'' என்ருர்.

தென்னிந்தியாவின் ஆந்திர மாநிலத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வி. ஜெயமாலா சென்னையிலேயே தற்போது இருந்து வருகின்ருர். இவரது தாய்மொழி தெலுங்கு ஆகும். ஆயினும் இவர் தமிழில் மிக சரளமாகப் பேசுகிருர்

''சாதாரண மக்கள் தமது விருப்பங்களுக்கேற்ற வகையில் கிடைக்கும் ஓய்வு நேரத்தில்தமக்கு பூரணமான திருப்தியைக் கொடுக்கக்கூடிய நிகழ்ச்சியொன்றையே அதிகம் விரும்புவார்கள். நாள் முழுவதும் சிரமப்பட்டு தொழில் புரிபவர்களது விருப்பமும் அதுவே. எனவே இத்தகையவர்களுடைய இரசனைகளுக்கும் மதிப்பளிக்கவேண்டும். இல்லாவிடில் அவர்கள் நடனக்கலையினுல் பெறக்கூடிய இன்பத்தையே இழந்து விடுவார்கள்.''

### உணர்ச்சியைத் தூண்டவல்ல

எனது நடன அபிநயங்கள் பெரும்பாலனவை உடற்கவர்ச்சியாகவே அமைந்துள்ளன என்று அவர் மேலும் கூறினுர். தொடர்ந்தும் அவர் ''நான் உடற்கவர்ச்சியைக் காட்டி ஆடுவது பார்வையாளர்களின் சிற்றின்பத்தை தூண்டி அவர்களை சங்கடத்தில் ஆழ்த்துவதற்காகவல்ல. பலர் இப்படியே எண்ணக்கூடும். ஆனுல் இன்று வேகமாகச் சென்று கொண்டிருக்கும் மேற்கத்திய நாடுகளிளெல்லாம், ஒரு குறிப்பிட்ட சில நேரத்தில் தானும் ஆடி சபையோர்களையும் குதூகலத்தில் ஆழ்த்தி உரிய பாராட்டையும் பெறும் நடன க்கலைஞர்கள் இத்தகைய பாணியிலான நடன அமைப்புகளையே கொண்டு விளங்குகின்றனர்' என்ருர்.

இதுவரை இருபதுக்கும்மேற்பட்ட கவர்ச்சி நடன நிகழ்ச்சிகளை இந்தியாவின் 'காஷ்மீர்' உட்பட பல்வேறு இந்தியமாநிலங்களிலும் மேடையேற்றியிருக்கும் ஜெயமாலாவின் முதலாவது வெளிநாட்டுப்பயணம் இதுவாகும். எதிர்காலத்தில் வேறும் பலஅண்டைநாடுகளுக்குச் செல்லவிருப்பதுடன்,மேற்கத்திய நாடுகளிலும் நிகழ்ச்சிகளை நடத்தும் சந்தர்ப்பத்தை தாம் எதிர்பார்த்திருப்பதாக இந்த கவர்ச்சி நடன தாரகை தெரிவித்தார்.

சந்திப்பு: அனந்த்

# ஐவருக்கு றிமாண்ட்

[புலோலி]

அத்துமீறி வீட்டில்புகுந்து குற்றம்புரிய முயன்ற ஐவரையும் றிமாண்டில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டார்.

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் தர்மகுலராசா என்பவரது வீட்டில் அத்துமீறிப் புகுந்து குற்றப்புரிய முயன்ருர்கள் என்று குற்றஞ்சாட்டி கரவெட்டியைச் சேர்ந்த நிக்கடாபிள்ளை அன்ரன், கிட்டிணன் ஜெகதீஸ்வரன், வல்லி செல்வராசா, சவரிமுத்து அந்தோனிஜோன், வயிரவன் பாக்கியராசா ஆகியோருக்கு எதிராகப் பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் ஐந்து சந்தேக நபர்களையும் கைதுசெய்து விசாரணை செய்தனர்.

விசாரணையின் பின்னர் ஐந்து சந்தேகநபர்களையும் பருத்தித்துறை நீதவான் திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதவான் சந்தேகநபர்கள் ஐவரையும் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# வழக்குத் தாக்கலாகும்

(பண்டத்தரிப்பு)

தொல்புரம் சமநலச்சேவை பகுதியில் தங்கள் விவசாய காணிகளுக்கான ஏக்கர்வரியை இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் செலுத்தத் தவறும் விவசாயிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. ஆகவே தாமதமின்றி தங்கள் ஏக்கர் வரியை செலுத்துமாறு தொல்புரம் கமநலச் சேவைப் பகுதி பெரும்பாக உத்தியோகத்தர் திரு. சூசைப்பிள்ளை இப்பகுதி விவசாயிகளை கேட்டுள்ளார்.

# இன்று நெடுந்தீவில் பாரதிவிழா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆதரவில் இன்று பாரதிநூற்ருண்டுவிழா நடைபெறும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பிரதேசசபைத் தலைவர் திரு. சி. வ. சங்கரப்பிள்ளை, நெடுந்தீவு கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் மற்றும் தேசியஇளைஞர்சேவை மன்ற உத்தியோகத்தர்கள் உட்பட பலர் உரை நிகழ்த்துவார்கள். நெடுந்தீவு மேற்கு நெமுலினியில் நடைபெறும் இவ்விழாவுக்கு மேற்படி மன்றத்தலைவர் திரு ஐ. தேவராசன் தலைமை வகிப்பார். விஷேட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# எம். பி. யுடன் ஆலோசிப்பர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு படகுச் சேவையில் பிரயாணிகள் தம்முடன் எடுத்துச் செல்லக்கூடிய பாவனைப் பொருட்கள் தொடர்பாகச் சமீபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள் தொடர்பாக இறுதியான முடிவுகளை மேற்கொள்ளும் வகையில் நெடுந்தீவு முன்னேற்றக் கழகத் தலைவர்களும், பிரதேச இயந்திரப் பொறியிலாளர் திரு. என். நித்தியானந்தன், பிரதேசசபைத் தலைவர் திரு. சிவ. சங்கரப்பிள்ளை, ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு நா. இராமச்சந்திரன், ஆகியோர் எதிர்வரும் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீவுப் பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். [உ]

# மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை முதல்வர் திரு.இராஜா விசுவநாதன் தலைமையில் செல்வன் சோமசுந்தரம் நிரஞ்சன் நந்தகோபனின் மிருதங்க அரங்கேற்றம் நாளை வெள்ளிக்கிழமை மாலை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறும்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மிருதங்க வித்துவான் ப. சின்னராசாவின் மாணவனான நிரஞ்சன் நந்தகோபனின் மிருதங்கஅரங்கேற்றத்தில் சட்டத்தரணி டபிள்யூ. எஸ். செந்தில் நாதனின் இன்னிசைக் கச்சேரியும் இடம் பெறும், யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி வயலினும், செல்வன் இ. யோகராசா கடமும், சங்கீதரத்தினம் அ. இரகுநாதன் கெஞ்சிராவும் வாசிப்பார்.

இவ் அரங்கேற்ற விழாவில் வைத்தியகலாநிதி பா. சோ. பாரதியும் திருமதி திருவரங்கநாயகி பாரதியும் பிரதமவிருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள் யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி, திரு. க. சிவராமலிங்கம் திரு சி. தியாகராசா ஆகியோரும் ஆசியுரை வழங்குவார்கள். (உ)

# சிரமதானம்

(கரவெட்டி)

கரணவாய் வடக்கு கிராமோதய சபை உறுப்பினர்கள் மகாதேவா தாம் போதிப் பாலத்தில் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளார்கள்.

இச் சிரமதானப் பணி அடுத்த மாதம் 24ம் திகதி நடைபெறவுள்ளதாக கிராமோதய சபைத் தலைவர் திரு. ஆ. க. மாணிக்கம் தெரிவித்தார்.

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

புங்குடுதீவு விவசாயப் போதனுசிரியராக கடமையாற்றிய திரு ஏ. ஜெயவீரசிங்கம் தொல்புரம் கமநலச் சேவைப்பகுதி விவசாயப் போதனுசிரியரா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
ஞானக்குழந்தை
24—30 வரை
நிறம்மாருத பூக்கள்

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்–ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)
விரைவில்
பாக்கியராஜ்- சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன்கலர்)


## ச.ச. நிலையங்களின் ஒன்றிணைப்பு அவசியம்

(யாழ்ப்பாணம்)

''பிரதேச ரீதியில் பலம் வாய்ந்த இயக்கமாக சனசமூக நிலையங்கள் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் பிரதேச ரீதியான கலை, கலாச்சாரங்களை வளர்ச்சி பெறச் செய்வதற்கும், சமூக சேவையில் சனசமூக நிலையங்களை தீவிரமாக ஈடுபடச் செய்வதற்கும் பிரதேச ரீதியான இணைப்பு மிக அவசியமானதாகும். சனசமூக நிலையங்கள் கிராமமட்டத்தில் செயல் படுவது மட்டுமல்லாது, உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் சமாசத்தை அமைத்து இயங்குவதற்கும்மியலுதல் வேண்டும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் மேற்பார்வை உத்தியோகத்தர் திரு வி. கந்தசாமி சனசமூக நிலையங்களுக்கான அறிவுறுத்தலில் தெரிவித்துள்ளார்.

கிராமமட்டத்திலும்பிரதேச மட்டத்திலும், சனசமூக நிலையங்கள் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட சனசமூக நிலையங்களின் ஒன்றிணைப்பு அவசியமானதாகும். சேவை மனப்பான்மையுள்ளவர்களை நாட்டில் உருவாக்குவதற்கும், செயல்பாடுள்ளவர்களை, சமூகப்பணியில் தீவிரப்படுத்துவதற்கும் சனசமூக நிலையங்கள் முன்வர வேண்டும். என்றும் அந்த அறிவுறுத்தலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

(வண். நிரு)


றீகல் [யாழ்.நகர்]
தினசரி 10-30, 2-30, 6-15 9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி [யாழ்.நகர்]
21—23
Daily 5 Shows
Steve Mc Queen in
THE HUNTER
Action— Color
விரைவில்! 'நான்!'

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
எம்.ஜி.ஆர்.-ராதா சலுஜா
இதயக்கனி

6-வது மகளிர் வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்.நகர்)
✶ சந்திரசேகர் ✶ சுபாஷினி ✶ ராஜீவ்
பாலைவனச்சோலை
விரைவில் : சிவாஜி, வாணிஸ்ரீ
வசந்தமாளிகை இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

ராணி (யாழ் நகர்) இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]
நாளை முதல் பணமா பாசமா

மனோகரா (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 4-45, 7-15, 9-30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு


# ★ மன்னூர் செய்திகள்

# மன்னூர் பஸ் நிலையம்: அடிக்கல்லுடன் மூடுவிழாவா?

(மன்னூர்)

மன்னூரில் சுமார் ஆறு லட்ச ரூபா செலவில் புதிய பஸ்நிலையம் அமைக்கவென போக்குவரத்து அமைச்சினுல் 1980ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. அடிக்கல்லுடன் மட்டும் காட்சியளிக்கும் புதிய பஸ் நிலையத்தின் கட்டிடவேலைகள் ஆரம்பிக்கப்படுமாவென பிரயாணிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்

மன்னூரில் புதிய பஸ்நிலையம் அமைக்கவெனப் பெருந்தொகையான கற்கள் குவிக்கப்பட்டன. ஆனுல் அக்கற்கள் யாவும் கடந்த வருடம் புதிய நிலையத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. இதனுலேயே புதிய பஸ் நிலையம் அமைக்கப்படுமா என்ற சந்தேகம் பிரயாணிகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது

அண்மையில் புதிய பஸ்நிலையத்தின் முதல் கட்டவேலைகளை ஆரம்பிக்கவென போக்குவரத்து அமைச்சினுல் இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதாகச் சில உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்,

இத்தகவலை உயர் அதிகாரிகள் தெரிவித்து பல மாதமாகியும் மன்னூரில் புதிய பஸ் நிலையத்தை அமைப்பதற்கான அறிகுறி எதுவும் இதுவரை தெரியவில்லை.

மன்னூரில் புதிய பஸ் நிலையம் அமையவுள்ள இடம் முன்பு ஒரு குளமாக இருந்தது. மன்னூரில் புதிய நவீன பஸ் நிலையம் ஒன்று அமையவேண்டுமென்பதற்காக மன்னூர் வர்த்தகர் சங்கம் பலலட்சம ரூபா செலவில் மண்போட்டு இக் குளத்தை நிரப்பி அரசிடம் கையளித்தது.

மன்னூர் வர்த்தகர் சங்கத்தினுல் பல லட்சம் ரூபா உதவி வழங்கப்பட்டும் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

மன்னூரில் புதிய பஸ் நிலையத்திற்கென அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தில் போக்குவரத்து அமைச்சு புதிய பஸ் நிலையத்தை அமைத்து பிரயாணிகளுக்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் எனப் பிரயாணிகள் கேட்கின்றனர்.

### பாலர் பாடசாலை

எருக்கலம்பிட்டியில் விரைவில் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பித்துவைக்கப்படும். இதேபோல் ஏனைய பகுதிகளிலும் பாலர் பாடசாலைகள் ஆம்பிக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை எருக்கலம்பிட்டி கிராமோதய சபைத் தலைவரும், மன்னூர் பிரதேச சபைத் தலைவருமான ஜனுப் எஸ். ஏ. கபூர் மேற்கொண்டுவருகிறுர்.

### தமிழ் தட்டச்சு இல்லாக்குறை

மன்னூர் மாவட்டத்தில்சகல அலுவல்களும் தமிழில் நடைபெற வேண்டுமென சகல திணைக்களங்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இவ்வேளையில் நானுட்டான் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து தமிழில் கடிதங்களை அனுப்புவதற்கு ஒரு தமிழ் தட்டச்சு இயந்திரமில்லை'' இவ்வாறு நானுட்டான் பிரதேசசபை தலைவர் திரு, எம். செபஸ்தியாம்பிள்ளை கவலை தெரிவித்துள்ளனர்,

### விசாரணை ஒத்திவைப்பு

மன்னூர்–சிறுத்தோப்பு கடல் பிரதேசத்தில் மீன் பிடிப்பது தொடர்பாக பேசாலை, வங்காலை, தாழ்வுபாடு. சிறுத்தோப்பு, கரிசல் ஆகியகிராமங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு தொடர்பான விசாரணை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம், 1?ம் திகதிகளில் நடைபெற்ற இவ் விசாரணை மீண்டும் அக்டோபர் 9ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### சட்டவிரோத மரங்கள்

மன்னூர் – பண்டி விரிச்சான் காட்டில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட பெருந்தொகையான காட்டுமரங்களும் பலகைகளும் கைப்பற்றப்பட்டன.

இரகசிய தகவல் ஒன்றினையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை பண்டி விரிச்சான் காட்டுக்குச் சென்ற மாந்தை உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகேசு வெட்டப்பட்ட நிலையில் அனுதரவாக காணப்பட்ட காட்டு மரங்களையும் பலகைகளையும் கைப்பற்றினுர் கைப்பற்றப்பட்ட பலகைகளின் பெறுமதி மட்டும் 7 ஆயிரம் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது,

### பள்ளிமுனை வெற்றி

மன்னூர் பள்ளிமுனை சென்லூசியாஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் மன்னூர் பெற்ரூ விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பள்ளிமுனை சென்லூசியாஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

மன்னூர் விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்வுதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 3–0 கோல்களைப் பள்ளிமுனை சென்லூசியாஸ் விளையாட்டுக் கழகம் பெற்று மன்னூர் பெற்ரூ விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது.

### இடமாற்றம்

கலாவேவ மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 5 வருடங்களாக சிரேஸ்ட விவசாய விஞ்ஞான விசேட ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. அ. மனோகரன் இம்மானுவேல் வாஸ் கடந்த திங்கட்கிழமை முதல் மன்னூர் உயிர்த்தராசன் குளம் ரோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு சிரேஷ்ட விவசாய விஞ்ஞான ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வங்காலை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பேசாலை வெற்றி

பேசாலை விளையாட்டுக் கழகத்திற்கும் தலைமன்னூர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பேசாலை விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

பேசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ்வுதை பந்தாட்டப் போட்டியில் 2–1கோல்களால் பேசாலை விளையாட்டுக்கழகம் தலைமன்னூர் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது.

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 7ம் திகதி வியாழக்கிழமை

(23—9—82)

மேடம்: பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகள் உண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணம் பறி போகலாம், முன்னெச்சரிக்கை நன்று.

இடபம்: குடும்ப வாழ்க்கை குதூகலம் நிரம்பியதாக இருக்கும். காதலர்களாயின் இத்தினம் கற்கண்டுபோல் இனிக்கும். பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவதற்கு இடமுண்டு தித்திப்பானநாள்.

மிதுனம்: வியாபாரத்தில் நஷ்டம் அடைவதற்கு இடமுண்டு. தொழில் துறையில் தொல்லைகள் தோன்றக்கூடும். இன்று அதிக பேச்சைத்தவிர்த்துக்கொள்ளவும்.

கடகம்: குடும்ப வாழ்க்கை இன்று சமமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார். டாக்டர்கட்கு சிறப்பான தினம். பயனுள்ள தொடர்புகள் பெருகும்.

சிங்கம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். தொழில்துறையில் புதிய சாதனைகள் உருவாகும். கற்றவர் ஆதரவு தப்பாமல் கிடைக்கும் இடமாற்றத்துக்கானவழியேற்படலாம்.

கன்னி: பொதுத் தறையில் நாட்டம் செல்லும். மக்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல் வாதிகட்கு செல்வாக்குப் பெருகும் பெரியஇடத்துத்தொடர்புகள் மூலம் புதிய பாதையும் திறக்கும்.

துலாம்: உறவாடிக்கெடுப்பதற்கு பகைவர்கள் பதுங்குவர். உற்சாகம்குன்றும் பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

விருச்சிகம்: தொழில்புரியும் இடத்தில் கருத்து வேற்றுமை தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள். பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

தனு: பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும், சுற்ருடலில் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும்.

மசரம்: அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் துன்பங்கள் விளையலாம் எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும்.

கும்பம்: ஆக்கப்பணியில்ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் தாய்வழி மூலம் நற்செய்தியும் பெருகும். எதிர்பாராத விருந்துபசாரங்கட்கு இடமேற்படும்.

மீனம்: புண்ணிய காரியங்களில் அதிக ஈடுபாடு ஏற்படும். பொதுத் துறையில் ஆர்வம் காட்டுவீர்கள. இல்லத்தில் இனிமைக்கும் இடமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## சங்கீத, நடன, நாடகப் போட்டி

(கரவெட்டி)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த சங்கீத, நடன, நாடகப போட்டி அடுத்த மாதம் 1ம், 2ம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வட்டா ரரீதியில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளே இப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

# இடமாற்றம்பெற்றபொலிசார் மீண்டும் கடமையில்?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் கடமையாற்றி இடமாற்றம்பெற்றுச் சென்ற பொலிசார், திரும்பவும் இங்கு கடமைக்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் ஜனாதிபதியின் வடபகுதி விஜயம் ஆகியவற்றை முன்னிட்டு சிவில் உடைகளில் இப்பொலிசார் கடமையாற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. [மா]

## லொறி-பஸ் விபத்தில் நால்வர் பலி

சென்னை, செப். 22

சேலத்தில் இன்று காலை நடந்த பஸ் லொறி விபத்தில் 4 பேர் பலியானார்கள். படுகாயமடைந்த 5 பேர் சேலம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

## கிரிக்கெட் டெஸ்ட் வெற்றி தோல்வி இல்லை!

சென்னை, செப். 22

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே சென்னை சேப்பாக்கம், சிதம்பரம் மைதானத்தில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டி இன்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இலங்கை கோஷ்டியைச் சேர்ந்த டுலிப்மெண்டிஸ் மிகச் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை கோஷ்டி முதலாவது இன்னிங்சில்சகலவிக்கட்டுகளையும் இழந்து 346 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 394 ஓட்டங்களையும் எடுத்தது.

இந்திய கோஷ்டி 1வது இன்னிங்சில் 6 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 566 ஓட்டங்களை எடுத்து, நிறுத்திக்கொண்டது. இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கட்டுகளை இழந்து 135 ஓட்டங்களைப்பெற்றது.


லேத் இயக்குநர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் (LATHEMAN and TRAINEE)

**வெற்றிடங்கள்**

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநரும், தொழில் நுட்பக் கல்லூரியில் Machining Course சித்தியடைந்தவராக அல்லது வேறு இடங்களில் பயிற்சி பெற்றுள்ளவர்களாக இருப்பவர்கள் லேத்தில் பயிற்சி பெறுவதற்கும் (Trainee) தேவை. நேரில் வரவும்.

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி 4597


## ஓராண்டு நினைவு அஞ்சலி

அமரர் பேரம்பலம் குணசிங்கம்
தொழில் நுட்ப உத்தியோகத்தர்

தோற்றம்: 17-02-1943 மறைவு: 23-09-1981

'கட்டையிலே உம்மை வைத்துக்
கண்ணீரால் நெய்யுமிட்டோம்—நீர்
விட்ட பணி முற்றுப்பெறல்
விண்ணி(லி)ருந்தே கண்டுடிவீர்.'

எமது பகுதியிலே பார்வைக்கு எளியவராய்
பண்பிலே இனியவராய்: செய்திறத்தில்
அரியவராய்
சேவைக்கே உரியவராய்; வளமுடன் பணிபுரிந்த
நல்லவொரு வல்லவரை எமது வேலைப்பகுதி
இழந்து இன்று ஓராண்டு நிறைவு.
இந்நாளில் உம் பிரிவை எண்ணி ஏங்குகிறோம்.

யாழ். மாநகராட்சி மன்ற
வேலைப்பகுதி பொறியியலாளரும்,
(4629) உத்தியோகத்தர்களும்.

## கொலை முயற்சி வழக்கு! இன்று விசாரணை

[யாழ்ப்பாணம்]

கரவெட்டி கொலை முயற்சி வழக்கு இன்று காலை யாழ். மேல்நீதிமன்றத்தில், நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வழக்கில் 1980ம் ஆண்டு மார்ச் மாதம் 14ம் திகதி கரவெட்டியைச் சேர்ந்த பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் என்பவரை அதே ஊரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பாக்கியராஜா என்பவர் கத்தியால் குத்திக் கொலைசெய்ய முயற்சித்ததாக இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் சட்டத்தரணி ரி. லிங்கராசாவின் அனுசரணையுடன் ஆஜராகியுள்ளார். அரசதரப்பில் அரச சட்டத்தரணி கே. வி. எஸ். சிறீஸ்கந்தகுமார் ஆஜராகியுள்ளார். இந்த வழக்கில் ஆறு பேர்சாட்சியமளிக்கவுள்ளனர். [மா]

## இந்திய வம்சாவழியினருக்கு அரசு காணிகள்

(கொழும்பு)

நாட்டின் சேரிகளில்வாழும் இந்திய வம்சாவழியினருக்கு, அரச காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்கும் திட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

குடியுரிமை இல்லத இந்திய வம்சாவழியினருக்கு அரச காணிகள், முதலில் ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படும். அவர்களின் குடியுரிமை விவகாரம் இந்த ஐந்து ஆண்டுகளுக்குள் முடிவடைந்தால் அக்காணிகள் அவர்களுக்கு மேலும் 40 ஆண்டுகளுக்கு விடப்படும்.

அமெரிக்க உதவியுடன் மகாவலி அபிவிருத்திப் பிரதேசத்தில் வனவிலங்குப் பூங்கா அமைப்பதற்கான திட்டமும் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டது.

நகர, மாநகர முதல்வர்கள் கார் வாங்குவதற்கான திட்டமும் அங்கீகாரம் பெற்றுள்ளது. இவ்வாறு வாங்கப்படும் கார்களுக்கு சுங்கத்தீர்வை விலக்களிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதற்கான மேலதிக கட்டணம் இவர்கள் கார் வாங்கும்போது செலுத்த வேண்டி ஏற்படும். (உ)

## முதியான்சே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெவில்சமரக்கோன், நீதியரசர்களான திரு. வீரரத்ன, திரு. வனசுந்தர ஆகியோர் முன்னிலையில் உயர்நீதிமன்றத்தில் திரு. முதியான்சே தென்னக்கோனின் ஆட்சேபனை மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

ஜனாதிபதித்தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகத் தான் போட்டியிடுவதற்காகக் கையளித்த வேட்பாளர் மனுப்பத்திரத்தை தேர்தல் ஆணையாளர் நிராகரித்ததை அடுத்தே ஆட்சேபனைமனுவை உயர் நீதிமன்றத்தில் திரு. முதியான்சே தென்னக்கோன் தாக்கல் செய்திருந்தார்.

விசாரணையின்போது திரு. முதியான்சே தமது சார்பில் ஆஜராகியிருந்தார். (உ)

## ஆசிரியர் சம்பளம் அக். 15-ல்

[யாழ்ப்பாணம்]

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஆசிரியர்களுக்கான அக்டோபர் மாதச் சம்பளம் அக்டோபர் 15ம் திகதி வழங்கப்படவுள்ளது.

வட பகுதியிலுள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் அக்டோபர் முதலாம் திகதிக்குள் ஆசிரியர்களின் சம்பளவிபரப் பட்டியல்களை அனுப்பிவைக்கும்படி யாழ். கல்வித்திணைக்கள பிரதம கணக்காளர் திரு. நா. திருநாவுக்கரசு சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். [மா]

## ஜனாதிபதி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டம் ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு உபதலைவர் திரு. ஆர். ஆர், நல்லையா தலைமையிய் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி அக்டோபர் 3ம் திகதி ஏழு பிரசாரக் கூட்டங்களில் சூறுவளிப் பிரசாரம் செய்யவுள்ளார்.

வேலணையில் நடைபெறும் பிரசாரக்கூட்டம் முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

மற்றும் காரைநகர், காங்கேசன்துறை, பருத்தித்துறை, அச்சுவேலி, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் நடைபெறும் பிரசாரக் கூட்டங்கள் முறையே திருவாளர்கள்: என். இரத்தினசிங்கம். கே. ஜெயபாலசிங்கம். கே. கணேசலிங்கம், சி. இ, குணரத்தினம், வி. செல்வரத்தினம், கே. என் நாயகம் ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

### பாதை-பாலங்கள் புனரமைப்பு

ஜனாதிபதி பிரசாரக்கூட்டங்களுக்குச் செல்லுமிடங்களிலுள்ள பாதைகள், பாலங்கள் இரவு-பகலாகப் புனரமைக்கப் பட்டுவருகின்றன. பிரதம பொறியியலாளர்களின் நேரடிக்கண்காணிப்பில் இவ்வேலைகள் நடைபெறுகின்றன. (மா)

## பாலஸ்தீன

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். மேலும் இத்தகைய படுகொலைச் செயல்களுக்கு இடம் ஏற்படாது தடுக்க வேண்டும். பாலஸ்தீனியர்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரமான முடிவு எடுக்கப் படுவது அவசியம்'' என்று இலங்கை அரசாங்கம் வற்புறுத்தியுள்ளது. (உ)

## கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

★ ''புகையிரதப் பாதுகாப்பு அதிகாரிகள் ஏன் அன்று கடமையாற்றவில்லை?'' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இக் கேள்விகளுக்கான பதில்கள் கிடைத்தும், வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இந்த அறிக்கையை பிரதி பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதியிடம் கையளிப்பார்.

### வவனியா பொலிஸ் விசாரணை

இக்கொள்ளைச் சம்பவம் நிகழ்ந்தபோது உறங்கலிருக்கைப் பெட்டிக்குப் பொறுப்பாக இருந்த கோறளகபகே என்பவர் யாழ். பொலிசாரால் விசாரணை செய்யப்பட்ட பின்னர் வவனியாப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவதினம் மெயில் ரயிலில் கடமையாற்றிய சாரதியும் விசாரணைக்குட்டுத்தப் படவுள்ளதாகத் தெரிகிறது.


# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஒல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number QJ B. 100236/81 Eelanaadu - P O Box: 49 Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.